சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண்.161/2022

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாயக்காள் | வயது | 68 |
| க/பெ | பொன்னியப்பன் | வட்டம் | அன்னூர் |
| விலாசம் | குப்பனூர் ஆத்திக்குட்டை | மாவட்டம் | கோயம்புத்தூர் |
| | | தொழில் | - |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எத்தனை ஏக்கர் நிலத்திற்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் 8 ½ ஏக்கர். அதில் எனக்கு என்ன உரிமை உள்ளது என்றால் அது எனது அப்பாவின் சொத்து என்பதால் உரிமை உள்ளது. தாவா சொத்தில் என் அப்பாவிற்கே எந்த உரிமையும் இல்லாத நிலையில் எனக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண் சொல்ல தெரியாது. ஆனால் பக்கத்து காட்டு காரர்களை சொல்லுவேன். தாவா சொத்து இலுப்ப நத்தம் கிராமம் புல எண்.720 ல் அமைந்துள்ளது என்றும் அதில் மொத்தம் 23 ஏக்கர் உள்ளது என்றால் சரி தான். புல எண்.720 ல் தாவா சொத்தான 8.27 ஏக்கருக்கும் எனது தகப்பனாருக்கும் மீதமுள்ள சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரி அல்ல. ராமசாமி எனது உடன் பிறந்த அண்ணன். தாவா சொத்திற்கு எனது அண்ணன் பெயரில் பட்டா எண்.011255 ன் படி கூட்டு பட்டா வழங்கப்பட்டு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் எனக்கு திருமணம் ஆகி

50 வருடங்கள் ஆகிவிட்டது. வருடம் தெரியாது. எனக்கு திருமணம் செய்து வைத்த போது எனது அப்பாவும், இறந்து போன எனது அண்ணன் இராமசாமியும் எனக்கு நல்ல முறையில் சீர் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரி அல்ல. எனக்கு திருமணம் ஆகி நான் 50 ஆண்டுகளாக எனது கணவர் வீட்டுக்கு சென்று விட்டதால் தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரி அல்ல. எனது கணவர் வீட்டோடு மாப்பிள்ளையாக எனது பெற்றோர் வீட்டில் தான் இருந்தார். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன் மனைவி. 4 முதல் 7 பிரதிவாதிகளின் தாயார் ஆன மற்றொரு பழனியம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் எனது உடன் பிறந்த அக்கா. 8 ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் எனது உடன் பிறந்த அக்கா. அவர் நேற்று காலை (09.01.2024) இறந்து விட்டார் என்றால் சரி தான். அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இராமமூர்த்தி என்ற மகனும், ராணி என்ற மகளும் உள்ளார்கள். நான் தாவா சொத்தில் எனது கணவரும் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்து விவசாயம் செய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்திற்கு கீழ் புறம் மார நாசுவர் என்பவரும், மேல் புறம் ஆதி கவுண்டரும், தென் புறம் நாகப்ப கவுண்டரும், வட புறம் வீரப்பன் கவுண்டர் நிலமும் உள்ளது. தாவா சொத்தில் கடைசியாக என்ன பயிர் செய்தேன் என்றால் கடலை, பயிர், கொள்ளு ஆகிய பயிர்கள் பயிர் செய்தேன். தற்போது பயிரும் கொள்ளும் விதைத்து உள்ளேன். விவசாயத்திற்கு வேலை ஆட்கள் உள்ளார்கள் என்றால் டிராக்டர் வைத்து உழுது விடுவேன். கடந்த 50 வருடமாக நான் தாவா சொத்துக்குள் போனது இல்லை என்றும் விவசாயம் செய்தது இல்லை என்றும் தாவா சொத்து சுமார் 30 அடி ஆழ பாறையில் இறங்கி ஓடையை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரி அல்ல. நான் எந்த பயிரும் செய்தது இல்லை என்றும் இந்த நிலம் விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலம்

அல்ல என்றும் தாவா சொத்து பாறைகள் நிறைந்த கள்ளங்காடு என்றால் சரி அல்ல. 1974 ல் நான் திருமணம் ஆகி வெளியில் சென்ற பின்னர் அவருக்கும் எனது அண்ணனுக்கும் வாய் மொழி பாகம் ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் அவர்கள் பிரிக்கவில்லை. அந்த வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் எனது அண்ணன் இராமசாமியின் வாரிசுகள் தாவா சொத்தை பொறுத்து அவர்களுக்குள் 12.11.2020 அன்று பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் மூலம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரி அல்ல. அவர்கள் பிரிக்கவே இல்லை. என்னுடைய பிராதிலேயே எனது அண்ணனின் வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரி அல்ல. அந்த விவரம் நான் பத்திர அலுவலகத்தில் நகல் எடுத்த பின்னர் தெரிய வந்ததாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகத்திற்கு சென்ற போது அவர் சொல்லித்தான் என்கு தெரியம். அந்த பத்திரத்தை இரத்து செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி அல்ல. அந்த பாகப் பத்திரத்தை இரத்து செய்ய எந்த பரிகாரமும் கேட்காமல் பாகம் கேட்க முடியாது என்றால் சரி அல்ல. நான் திருமணம் ஆகி சென்ற பின்னர் எனது அண்ணன் இராமசாமி 27.03.1987 அன்று பக்கத்து காட்டுக்காரரான கண்ணம்மாள் வகையரா உடன் ஒரு போகிய ஒப்பந்தம் எழுதி கொண்டார் என்றால் இல்லை. தாவா சொத்தையும் பக்கத்து நிலத்தையும் சேர்த்து எனது அண்ணன் இராமசாமி விவசாயம் செய்து வந்தார் என்றால் சரி அல்ல. நான் விவசாயம் செய்து இருந்தால் என் பெயரில் உள்ள வருவாய் ஆணவங்களை தாக்கல் செய்து இருப்பேன் என்றால் சரி அல்ல. என் அப்பா உயிருடன் இருந்த போது பாகம் கேட்டேனா என்றால் கேட்டேன். தருவதாக சொன்னார். எப்போது பாகம் கேட்டேன் என்றால் தேதி தெரியாது. பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பி உள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும் தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற

**கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. தாவா சொத்து என் அண்ணன் இராமசாமிக்கு அரசு கொடுத்த பட்டா படி தான் பாத்தியம் என்றால் சரி அல்ல. அந்த சொத்தில் பாகம் கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஓம்/- கா.கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.